**அக்டோபர் - 21**

**"பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக."**

**- லூக் 11 : 2.**

இது பயபக்தியோடு கூடிய வணக்கத்தையும், தெய்வீக நன்மையையும் பெருமையையும் உயர்வாக மதிக்கிறதையும், ஒத்த பயபக்தியையும் தெரிவிக்கிறது. கர்த்தருக்கு நம்முடைய விண்ணப்பத்தை ஏறெடுப்பதில் நம்முடைய முதல் எண்ணம், நம்மைப்பற்றிய சுயநலமுள்ளதொன்றாகவோ அல்லது நமக்கு மிகவும் அருமையான மற்றவர்களுக்காகவுள்ள எண்ணங்களாகவோ அல்ல. ஆனால் நம்முடைய எல்லா எண்ணங்களிலும், நோக்கங்களிலும், கணக்கிடுதலிலும், தேவனே முதலாவதாக இருக்க வேண்டும். நம்முடைய பரமபிதாவின் நாமத்தின் கனத்திற்கு ஒத்திராத எதற்காகவும் நாம் ஜெபம் செய்யக் கூடாது. நாம் ஜெபம் முற்றிலுமாக அனுமதி கொடுக்காத, அதிகாரங்கொடுக்காத, காரியங்களுக்காக, நமக்காகவோ அல்லது நம்முடைய பிரியமானவங்களுக்காகவோ ஆசைப்படக்கூடாது. ஒருவேளை பாசாங்கு செய்கிற, கிறிஸ்தவர்களுக்குள்ளே தேவனுக்காகவுள்ள பயபக்தியின் இந்த எண்ணத்தை விட இருதயத்தின் எந்த ஒரு தன்மையையும் அழிக்கப்பட்டுப் போவதற்குரிய அதிக அபாயத்திலில்லை. **- Z ’04, 118 (R 3351)**

தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு எல்லாம் செய்கிறார். ஒரு நல்ல உலகப்பிரகாரமான தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் செய்கிறதை விட அதிகமாகச் செய்கிறார்.அதற்கேற்ப அவர் அவர்களை ஜெநிபித்து, அவர்களிடம் அன்புகூர்ந்து, அவர்களோடு ஐக்கியப்பட்டு அவர்களுக்கு வேண்டியவைகளை அறிந்து அவர்களுக்குக் கற்பித்து அவர்களைத் தயார் செய்து, தன்னுடைய பிள்ளைகளாகிய அவர்களுக்கு ஒரு சுதந்திரத்தையும் கொடுக்கிறார். நம்முடைய பரமபிதாவாக அவர் சிரேஷ்ட அளவில் இந்தக் காரியங்கள் எல்லாவற்றையும் நமக்குச் செய்கிறார். ஆகையால், மிகவும் தக்கவிதமாக அவருடைய நாமத்தை நாம் பரிசுத்தப்படுத்த வேண்டும். நாம் நம்முடைய இருதயத்தின், மனதின், ஆத்துமாவின், பலத்தின் மிகச் சிறந்த பயபக்தியையும், அன்பையும், அவருக்குக் கொடுக்கப்படும்போது இதை நாம் செய்கிறோம். முடிவான பகுப்பில் நம்மை கிறிஸ்துவைப் போலொத்தத் தன்மையை பளிங்கைப் போலாக்கி நம்மை ராஜ்யத்திற்காகத் தகுதியுடையவர்களாக்கும். அப்படிப்பட்ட நம்முடைய நடத்தையை இது குறிக்கிறது. அவருக்கு இதற்குக் குறைந்த ஒரு கனத்தைக் கொடுக்க நாம் விரும்புவதுமில்லை. **- P ’26, 156.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**ஏசா 63:17; மத் 5:44,45; 6:4; 8:13; ரோம 8:15; 1கொரி 8:6; 2கொரி 1:3; 6:18; கலா 4:4-7; எபே 1:3,17; 3:14; 5:20; கொலோ 1:3,12; யாக் 1:17; 1யோவா 3:1; வெளி 3:5;14:1.**

**கோபுர வாசிப்பு : Z ’14, 8 (R 5378).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் தேவனின் நாமத்தை மகிமைப்படுத்தினேனா? எந்தச் சந்தர்ப்பங்களில்? என்ன பலனோடு?**